R.N.I.No.TNTAM/2000/3629 Postal Registration No.DDL/19/2015-2017
Licensed to Post Without Pre-Payment Registration No. TN/WPP-169/SR/2015-2017
Date of Publication: 10th of Every Month
Posted on 10th of Every Month 2017 at Batlagundu Post office.
December 2017



அரியலூர் மாவட்டத்தில் உள்ள உடையார்பாளையத்தில்
22 வது வாசகர் கருத்தரங்கு மற்றும் கர்த்தருடைய பணிக்காக அடிக்கல் நாட்டுதல்

*Our Radio Program:* Sri Lanka Radio SW 31 Meter Every Saturday 5.30P.M &
Our TV Program: Nambikkai TV Every Monday & Saturday 7.30 P.M &
Tamilan TV Every Wednesday 6.15 P.M

*Cell : 94435 58041*
*Phone : 04543 263 278*
*E-Mail arjunanglory@gmail.com*

**To**

Postman Remarks (If Undelivered):

- Refused
- No such person
- Address insufficient
- Left without instructions
- Deceased

*Our Postal Address:*
THE WORD OF CHRIST
POST OFFICE BOX No. 5
BATLAGUNDU - 624202
S.INDIA

Owned and published by B.Arjunan
from 17.2.102 D/5 Rajan Nagar, Batlagundu -624 202
and printed by R.Sathiyamoorthy at Bharathi press,
14/13/24 Melamanthai Street,Batlagundu - 624 202.
Editor and Publisher B.Arjunan



தனிப்பிரதி ரூ.5/-
ஆண்டு சந்தா ரூ.50/-

THE WORD OF CHRIST

# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்

மரம் 18 டிசம்பர் 2017 கனி 1

நன்மையான எந்த ஈவும் பூரணமான எந்த வரமும்
பரத்திலிருந்துண்டாகி, சோதிகளின் பிதாவினிடத்திலிருந்து
இறங்கிவருகிறது – யாக்கோபு 1:17




கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே
சகல ஞானத்தோடும் பரிபூரணமாக
வாசமாயிருப்பதாக – கொலோசெயர் 3:16

THE WORD OF CHRIST

## SUCCESS
1 Your Life

ஆசிரியர்
B. அர்ஜுனன்

# World Evangelism Gospel Media

**Arjunan in Tamil on Nambikkai TV & Radio:**
TV:On Monday & Saturday 7.30-7.45 p.m
Radio:Every Saturday 5.30-5.45 pm on 31 meter band of Sri Lanka Radio. *(TAMILNADU Contact Mobile: 9443558041)*

**Sunny, Francis & Vinay David in Hindi onTV:**
Every Sunday and Tuesday 7.00-7.30 p.m on shubhSandesh Hind Channel.
*(NEW DELHI Contact Mobile: 09810896789)*

**P.K.Varghese in Malayalam on TV:**
Every Saturday 6.00-6.30 a.m on Jai Hind Channel.
*(KERALA Contact Mobile: 9447035465)*

**Philemon & Kingsley in Tamil on Tamilan TV and Nambikkai TV:**
Every Sunday 6.45-7.00 a.m and Every Friday 6.00-6.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 9244214421)*

**Rajanayagam in Tamil on Tamilan TV:**
Every Monday 7.00-7.15 a.m and Thursday 9.30-10.00 p.m and Saturday 7.15-7.30 a.m.
*(TAMILNADU Contact Mobile: 98427 30382)*

**P.R.Swamy & Douglas in Tamil on Radio:**
Every Sunday to Wednesday at 5.30- 5.45 p.m on 31 meter band of Sri Lanka Radio. *(KARNADAKA Contact Mobile:09844 70763)*

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Rakshana TV:**
Every Sunday 6.00 p.m Every Wednesday 6.30 p.m Every Thursday 11.00 a.m Satyavani TV Online:www.Sakthitv.in Every Wednesday & Friday 8.00 p.m. Every day at 7.30 and 3.30 .m. on Kanthi TV in A.P Only.
*(ANDRAPRADESH Contact Phone: 08842363722)*

## தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் ஊழியங்கள்



மானாமதுரை மாதா கல்லூரியில்



செய்திவேளையில் சகோதரர்



புதிய வாசகர்களோடு பேட்ஸ்

**THE WORD OF CHRIST**
Monthly Magazine
Editor
B.ARJUNAN

**தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்**
**மாத இதழின் உள்ளே...**
ஆசிரியருரை,
செய்திகள்: ஜெ.சி.சோட், பெட்டி சோட்,
ஜெர்ரிபேட்ஸ் மற்றும்
வேதபாடம், வாலிபர் பகுதி, பெண்கள் பகுதி
சிறுவர் பகுதி, வேத அறிவுப்போட்டி இன்னும் பல...

"Go ye into all the world, and preach the gospel to every creature" - Mark 16:15
"The Churches Of Christ Salute you" Romans 16:16

Published by
WORLD LITERATURE PUBLICATIONS
Post Box No.5, Batlagundu - 624 202.
SOUTH INDIA



## வேத அறிவுப் போட்டி எண்: 208

போட்டியாளர்கள் கவனத்திற்கு,

கீழ்கண்ட பத்து கேள்விகளுக்கும் வசன ஆதாரத்துடன் விடை எழுதி, தபால் மூலம் இம்மாதம் இறுதிக்குள் "தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்" முகவரிக்கு வந்து சேரும்படி உங்கள் முழு முகவரியுடன் எழுதி அனுப்பவும். விடை பின்வரும் மாத இதழில்களில் காண்க.

1. மெழுகு அக்கினிக்கு முன்பாக உருகுகிறதுபோலவும், மலைகளிலிருந்து பாயுந் தண்ணீர் தரையைப் பிளக்கிறதுபோலவும், பர்வதங்கள் அவர் கீழே உருகி, பள்ளத்தாக்குகள் எப்படிப்போம்?
2. ஆசாரியர்கள் ஆராதனை முறைமைகளை நிறைவேற்றும்படிக்கு முதலாங்கூடாரத்திலே நித்தமும் பிரவேசிப்பார்களா?
3. நினிவே பூர்வகாலமுதல் எதைப்போல் இருந்தது?
4. விசுவாசமும் கிரியைகளில்லாதிருந்தால் அது எப்படிப்பட்டதாயிருக்கும்?
5. கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார்; பூமியெல்லாம் அவருக்கு முன்பாக எப்படியிருக்கக்கடவது?
6. போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுபவர்கள் யார்?
7. இஸ்ரவேலில் மீதியானவர்கள் எது செய்வதில்லை, என்னபேசுவதில்லை, எதை அவர்கள் வாயில் கண்டுபிடிக்கப்படுவதுமில்லை?
8. கர்த்தருடைய நாளில் பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம் என்பது உண்மையா?
9. சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டவர் வருவார் என்று சொல்லப்பட்ட வசனம் நிறைவேறியதா?
10. உலகத்தை ஜெயிக்கிறவன் யார்?




**போட்டியாளர்கள் கவனிக்க...**

ஒவ்வொரு முறையும் விடை எழுதும்போது உங்களுடைய பதிவு எண் (அதாவது Ref.No) மற்றும் மொபைல் எண் எழுதவும். நமது மாத இதழை படிக்க ஆர்வமுள்ளவர்களுக்கும் அறிமுகம் செய்யவும். நன்றி. ஆசிரியர்

## இம்மாதம் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நடத்தும் வேதபாட வகுப்புகளும் சுவிசேஷ கூட்டங்களும்

26

நாள்: 25.12.2017 திங்கள் கிழமை
நேரம்: காலை 10.00 மணி
இடம்: தி வேர்ட் ஆப் கிரைஸ்ட் அலுவலகம்
D/5 ராஜன் நகர், வத்தலக்குண்டு -624202
திண்டுக்கல் மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா
தொடர்புக்கு:
B.அர்ஜூனன், 9443558041






சிறுவர் பகுதி

# நோவா – Noah

*வேதபகுதி: ஆதியாகமம் 6:1-24*

*சகோ.மோகன்*



கர்த்தருக்குள் பிரியமான பிள்ளைகளே தேவன் ஆதியிலே பூமியை உருவாக்கி மனுஷன் உள்ளிட்ட ஜீவ ஜந்துக்களை உருவாக்கினார். விசேஷமாக மனுஷனை தம்முடைய சாயலின் படி உருவாக்கினார். மனுஷர்கள் பூமியிலே பலுகிப்பெருகினபோது அவர்களோடே அக்கிரமமும் பெருகிற்று. அப்பொழுது தேவனாகிய கர்த்தர் பூமியை நோக்கிப்பார்த்தார். அப்பொழுது, "மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும், அவன் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும், கர்த்தர் கண்டு, தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது" (ஆதியாகமம்6:5,6).

இப்படிப்பட்ட அக்கிரமம் நிறைந்த ஜனங்கள் மத்தியில் ஒரு நீதிமான் காணப்பட்டான். அவன்தான் நோவா. "நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான்; நோவா தேவனோடே சஞ்சரித்துக்கொண்டிருந்தான்" (ஆதியாகமம்6:9). நீங்கள் இந்த நோவாவைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? அல்லது அங்கே துன்மார்க்கமாக வாழ்ந்து தேவனுக்கு மனஸ்தாபத்தைக் கொண்டு வந்த ஜனங்களைப்போல வாழ ஆசைப்படுகிறீர்களா? நோவாவைப்போல வாழுவோம் என்றால் கர்த்தருடைய கண்களில் தயையைப்பெற்றுக்கொள்வோம். நோவா தன் காலத்தில் இருந்தவர்களுக்குள்ளே நீதிமானும் உத்தமனுமாயிருந்தான். அருமையான தம்பி, தங்கைகளே நீங்களும் அப்படியிருப்பீர்களா? அப்பா, அம்மா, நண்பர்கள், மற்றும் உறவினர்களிடம் பொய்சொல்லாமல் உண்மையாயிருப்பீர்களா?

இந்த நோவா அப்படியிருந்தபடியால் அழிவிலிருந்து காக்கப்பட்டார். தேவன் தனக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் நோவா செய்து முடித்தார். என்னால் இதை செய்யமுடியாது தேவனே என்று அவர் தேவனை நோக்கி முறையிடவில்லை. நீ கொப்பேர் மரத்தால் உனக்கு ஒரு பேழையை உண்டாக்கு என்றார். அந்தப்படியாக நோவா செய்தார். அவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த அவனுடைய குடும்பத்தாரும் காக்கப்பட்டார்கள். பக்தியுள்ள பெற்றோரின் வார்த்தைக்கு கீழ்ப்படியும் போது நாமும்கூட காக்கப்படுவோம். இந்த உலக அழிவிலிருந்து காக்கப்பட கர்த்தருடைய வார்த்தைக்கு செவிகொடுப்போம்!

**மனப்பாட வசனம்:** **"நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" (ஆதியாகமம்6:8).**




# தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்
## THE WORD OF CHRIST


புதிய ஏற்பாட்டு தூய கிறிஸ்தவ மாத இதழ்

மரம் - 18 டிசம்பர் -2017 கனி - 1


ஆசிரியருரை

# தேவனுக்கு உபயோகமான பாத்திரம்

## A Useful Vessel For God



**மு**தல் நூற்றாண்டில் அநேகர் தேவனுக்கு உபயோகமான பாத்திரமாக வாழ்ந்தனர். அதினாலே சபையானது நாளுக்கு நாள் வளர்ந்துபெருகிற்று. அப்போஸ்தலனாகிய பவுல் தெசலோனிக்கேயர் சபைக்கு எழுதும்போது; "தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று" எழுதுகிறதை நாம் 1தெச.2:11-ம் வசனத்தில் படிக்கிறோம்.

**முதலாவது ராஜ்யத்திற்கும்** என்று எழுதுகிறார். ராஜ்யம் என்பது கர்த்தருடைய ஆளுகை அதாவது சபை. சபை கிறிஸ்துவின் சரீரமாகவும் மணவாட்டியாகவும் இருக்கிறது. இந்த சபைக்கு கர்த்தர் தலையாயிருக்கிறார். இந்த சபையில் இருக்கிற ஒவ்வொருவரும் தேவனுக்கு உபயோகமான பாத்திரங்களாக ஜீவிக்கவேண்டும். ஏனெனில் "சபையிலே கிறிஸ்து இயேசுவின் மூலமாய்த் தலைமுறை தலைமுறைக்கும் சதாகாலங்களிலும் மகிமை உண்டாவதாக" என காண்கிறோம் (எபே.3:21). சபையானது தேவனுக்கு மகிமையாக இருக்கிறது. சபையில் இருக்கிறவர்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகமெங்கும் அறிவிக்கக்கூடிய உன்னதமான பணியைப் பெற்று இருக்கின்றனர். பைத்தியமாக தோன்றுகிற பிரசங்கத்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்கு பிரியமாயிற்று. ஆகையினாலே சபையிலே கிறிஸ்துவின் மூலமாக இரட்சிப்பு வருகிறது என காண்கிறோம்.

இன்றைக்கு அநேக சபைகள் இருக்கிறது. அவைகள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சபைகளா என்று பார்க்கும்போது கர்த்தருடைய சபையைத் தவிர மற்ற எல்லா சபைகளுமே மனிதனால் ஏற்படுத்தப்பட்டவைகளாகவே இருக்கிறது. மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் மனிதபோதனைகள் இருக்கிறது. ஆனால் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சபையில் கர்த்தருடைய போதனை மட்டுமே இருக்கிறது. சபையானது கிறிஸ்துவுக்கு கீழ்ப்படிகிறது. அவருடைய ஆளுகைக்குள்ளாக இருக்கிறது. ஆகையால் அது தேவனுடைய ராஜ்யம் என்றும் கிறிஸ்துவின் ராஜ்யம் என்றும் அழைக்கப்படுகிறது. இந்த ராஜ்யமாகிய சபைக்குள்ளாக இருக்கிறவர்கள். பரிசுத்தமுள்ளவர்களாயும் நீதியுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். ஏனெனில் பாவத்திலிருந்து மீட்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானார்கள். ஆகையால் பவுல்

எழுதும்போது; "விசுவாசிகளாகிய உங்களுக்குள்ளே நாங்கள் எவ்வளவு பரிசுத்தமும் நீதியும் பிழையின்மையுமாய் நடந்தோமென்பதற்கு நீங்களும் சாட்சி, தேவனும் சாட்சி" என்கிறார் (1தெச.2:10). அப்போஸ்தலர்கள் பேச்சினாலே மாத்திரமல்ல, ஜீவியத்திலும் சபையார் மத்தியில் சாட்சியுள்ளவர்களாக வாழ்ந்திருக்கிறார்கள். உபதேசிக்கிறவன் முதலாவது அதன்படி நடக்கவேண்டுமல்லவா, ஊருக்குத்தான் உபதேசம் தனக்கல்ல என்று ஒருவன் சொல்லமுடியுமா? கூடாதே. போதிக்கிறவன் அதன்படி நடக்கவேண்டும். பவுல் அந்தவிதமாக விசுவாசிகள் மத்தியில் இருந்தார். மேலும் அவர் சொல்லும்போது; "எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது; எல்லாவற்றையும் அநுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் பக்திவிருத்தியை உண்டாக்காது" என்கிறார் (1கொரி.10:23). ஒரு கிறிஸ்தவன் இப்படித்தான் வாழவேண்டும் என்ற போதனை இருக்கிறது. அதன்படிதான் தன்னுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்ளவேண்டும். எப்படிவேண்டுமானாலும் வாழலாம் என்பதல்ல. செய்யக்கூடாத ஒரு காரியத்தை ஒரு கிறிஸ்தவன் செய்யும்போது தேவனை அறியாத அஞ்ஞானி பார்த்து இவனெல்லாம் ஒரு கிறிஸ்தவனாம் என்று ஏளனமாக நினைப்பான் அல்லவா? ஆகையால் தேவனுக்கு உகந்த பாத்திரமாக ஒவ்வொருநாளும் வாழும்படியாக நாம் முயற்சிக்கவேண்டும்.

**இரண்டாவது** அதேவசனத்தில் **மகிமைக்கும்** என்று படிக்கிறோம். மகிமை என்பது பரலோகம் என்று காண்கிறோம். தேவன் சபையின் மூலமாக பரலோகத்திற்கு அழைத்திருக்கிறார். சபையில் நம்மை சரிசெய்கிறார் என்றே சொல்லவேண்டும். சபை என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாக்கப்பட்ட மணவாட்டி. ஆயத்தமாக்கப்பட்டவர்கள் மட்டுமே அவரோடு ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள். ஆகையால் தேவனுடைய அழைப்பையும் அவருடைய சித்தத்தையும் அறிந்துகொள்ளுங்கள். ஏனெனில், "தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" என காண்கிறோம் (வெளி.21:27). உங்களுடைய வாழ்க்கையில் தீட்டுள்ளவர்களாக வாழ்ந்துகொண்டிருக்கிறீர்களா? அருவருப்பான காரியங்களை செய்துகொண்டிருக்கிறீர்களா? பொய்பேசுகிறவர்களாக இருக்கிறீர்களா? என்பதை எண்ணிப்பார்க்கவேண்டும். உலகத்திற்கு ஏற்றார்போல வாழ்ந்துகொண்டு நித்தியமான பரலோகத்திற்குள்ளாக சென்று விடலாம் என்று நினைத்துவிடக்கூடாது. இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் அதில் பிரவேசிப்பதில்லை என காண்கிறோம். பரிசுத்தமாக வாழ்ந்து நீதியை நடப்பிக்கிறவர்கள் ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுத்தகத்தில் எழுதப்படுவார்கள். அவர்கள் மட்டுமே அதில் பிரவேசிப்பார்கள் என காண்கிறோம். **I.A.S.** பரீட்சை எழுதுகிறவர்கள் நேரடியாக அந்த பரீட்சையை எழுதமுடியாது. முறைப்படியாக படிப்படியாக படித்து ஏதாவது ஒரு டிகிரி முடித்து, அந்த ஐ. எ. எஸ். பரீட்சைக்கு ஆயத்தமாகிறார்கள். அதைப்போல தேவன் ஏற்படுத்திவைத்திருக்கிற இந்த இரட்சிப்பின் திட்டத்தை முதலாவது ஒருவர் புரிந்துகொண்டு அதற்கு கீழ்ப்படிந்து, பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்று, கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டு, பரிசுத்தமுள்ளவர்களாயும், நீதி நியாயங்களை செய்கிறவர்களாயும் வாழும்போது தேவனுக்கு உகந்த பாத்திரங்களாக



**என்று சிலர் எண்ணுகிறபடி கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்து அசதியாயிராமல், நம்மிடம் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார் (2பேது.3:9).**

4. அத்தேனே பட்டணத்து விக்கிரக வழிபாட்டுக்காரர்களுக்கு பவுல் மனந்திரும்புதலைப்பிரசங்கித்தார்.


**அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போலிருந்தார். ஆனால் இப்பொழுதோ எங்குமுள்ள மனிதரும் மனந்திரும்பவேண்டுமென்று கட்டளையிடுகிறார் (அப்.17:30).** அனைவரும் மனந்திரும்பவேண்டியது அவசியமாயிருக்கிறது.




## 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' கடந்துவந்த பாதை....

1992ல் ஆகஸ்ட் மாதம் துவங்கப்பட்ட இந்த மாத இதழின் ஊழியமானது மிகச் சிறிய அளவில் நான்கு பக்கங்களுடன் முதலாவது 100 பிரதிகள் அச்சிடப்பட்டு, வத்தலக்குண்டு கிறிஸ்துவின் சபையின் மூலமாக முதலாவது வெளியிடப்பட்டது.

சகோ.அர்ஜுனன் மற்றும் அவரது துனைவியார் சகோதரி குளோரி அவர்கள் இருவரும் சேர்ந்து கர்த்தருக்காக சபை ஊழியத்தோடு சேர்ந்து ஒரு ஊழியத்தை துவங்கவேண்டும் என்ற ஆவலோடு இருந்தபோது அவர்கள் மனதில் உதித்தது மாத இதழ் ஒன்றை வெளியிடவேண்டும் என்ற ஆவல்.




சில வருடங்கள் உருண்டோடியது. 1995 உலக பிரசித்தபெற்ற சுவிசேஷகர் சகோ.ஜே.சி.சோட் மற்றும் சகோதரி பெட்டி சோட் தம்பதியினர் இவ்விதழின் பிரதியை டெல்லியில் பார்த்து எங்களை காணவேண்டுமென்ற ஆவலோடு இருந்தனர். அவ்வண்ணமே தேவன் ஒருமுறை அவ்வாய்ப்பினை ஏற்படுத்திய போது கிறிஸ்துவின் வசன இதழின் ஆசிரியராகிய என்னைக் கண்டு ஆச்சரியமடைந்து மனமகிழ்வுடன் இலக்கிய பணியில் மிகவும் அநுபவம் வாய்ந்த அருமைத் தம்பதியினர் எங்களை உற்சாகப்படுத்தினர்.

எமது ஆசிரியர் உரையில் நான் எழுதிய முதல் செய்தி "நித்திய ஜீவன்" கடந்த 25 ஆண்டுகளில் வேதாகம செய்தியாக வித்தியாசப்பட்ட தலைப்புகளில் 300 செயதிகள் இதுவரை வெளிவந்துள்ளன. 3000 வேதாகம கேள்விகள் வசன ஆதாரத்துடன் வெளிவந்துள்ளன. 32 மாவட்டங்களிலும், அதைத் தொடர்ந்து தமிழர்கள் மத்தியில் உலக அளவில் 5000 வாசகர்களையும், நூற்றுக்கணக்கான தேவ ஊழியர்களையும் பெற்றிருக்கிறோம். தற்போது 7000 பிரதிகள் அச்சடப்படுகிறது. வத்தலக்குண்டு சபையாரும், தேவ ஊழியர்களும், வாசகர்களும் இவ்விதழ் தொடர்ந்து வெளிவர உதவியாயிருக்கின்றனர். பல இடங்களில் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' கூட்டங்களை நடத்திவருகிறோம். இதன் மூலமாக தற்போது வேதாகம பள்ளி ஒன்றை துவங்கியுள்ளோம். வானொலி மற்றும் தொலைக்காட்சி ஊழியங்களும் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. நூற்றுக்கணக்கானோர் ஞானஸ்நானம் இவ்விதழ் மூலமாக பெற்று கர்த்தருடைய சபையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு பின்பு சொந்த சபைகட்டிடத்தையும் சொந்த அலுவலகத்தையும் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' பெற்றுள்ளது. இதற்காக ஒத்துழைத்த அனைத்து தேவ பிள்ளைகளுக்கும் நன்றி சொல்லுகிறோம். இப்பணி தொடர எங்களுக்காக ஜெபியுங்கள்.

**அன்புடன்,**

**ஆசிரியர்**


***1992ல் முதலாவது வெளிவந்த இதழைக் கொடுப்பவர்களுக்கு ரூ1000/– பரிசு***

பாடம் -26

**வேதாகமத்தின்படியான மனந்திரும்புதல் என்றால் என்ன?**

What Is Bible Repentance?

*- Jerry Bates*




1. அநேக பிரசங்கியார்கள் "இயேசுவை என்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்" என்று நம்மை உற்சாகப்படுத்துகிறதை நாம் கேள்விப்படுகிறோம். இந்த வார்த்தைகள் வேதப் புத்தகத்தில் எந்த இடத்திலும் காணப்படவில்லை.

2. கிறிஸ்தவர்களுக்கு இயேசு சொந்த இரட்சகரே. ஆனால் இந்த வார்த்தைகள் சுவிசேஷத்தின் ஒரு முக்கியச் செய்தியான மனந்திரும்புதலை விட்டு விடுகிறது.

3. மனந்திரும்புதலை போதிப்பதற்கு பதிலாக கிறிஸ்தவ உலகம் "கிறிஸ்துவை ஏற்றுக்கொள்" என்று போதிக்கிறது. இது நம்மை எந்தவித உணர்வுபூர்வமான வேதனையுமின்றி, கஷ்டமுமின்றி கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ள அனுமதிக்கிறது.

4. மனந்திரும்புதல் என்பது விழுந்துபோன மனிதனின் பங்காக இருக்க வேண்டும் என்று பொருள்பட சொல்லப்பட்டிருக்கிறது. மனந்திரும்புதல் என்பது கர்த்தரின் கட்டளைகளில் மிகவும் கடினமான ஒன்று. அதுவே கடினமானதாக இல்லாவிட்டால், தேவன் மனிதனுக்குக்கொடுத்த கட்டளை இதுவே.

ஜே.டபிள்யூ மெக்கார்வி எழுதுகிறார். மனிதனுடைய இரட்சிப்புக்கு மிகப்பெரிய தடையாயிருப்பது அவன் சித்தத்திலுள்ள வீண் பிடிவாதமே.

ஒவ்வொருவனும் உலகத்தை மாற்ற வேண்டுமென்று சிந்திக்கிறான் ஆனால் ஒருவனும் தான் மாறுவதைப் பற்றி சிந்திப்பதில்லை. லியோடால்ஸ்டாய்

"முஸ்லிம் பழமொழி" ஒருமலை நகர்ந்ததென்று நீ கேள்விப்பட்டால் அதை நம்பு, ஆனால் ஒரு மனிதன் தன் குணத்தை மாற்றிவிட்டான் என்று கேள்விப்பட்டால் அதை நம்பாதே.

**1. மனந்திரும்புதல் என்பது எப்போதுமே விழுந்துபோன மனிதனுக்குரிய தேவனின் முக்கிய செய்தியாயிருக்கிறது.**

**மனந்திரும்புவதற்கான பழைய ஏற்பாட்டு புத்திமதிகள்.**

ஒவ்வொரு தீர்க்கதரிசியினுடைய செய்தியின் மத்தியிலும் மனந்திரும்பவேண்டுமென்ற செய்தியிருக்கும். யோனாவின் பிரசங்கத்தைக் கேட்டு நினிவே மக்கள் மனந்திரும்பவேண்டுமென்று சொல்லப்பட்டதாக பதிவு செய்யப்படவில்லையென்றாலும் மனந்திரும்பினார்கள்.

**புதிய ஏற்பாட்டு புத்திமதிகள்**

1. யோவான் ஸ்நானகன் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தார்.

2. இயேசுவானவர் மனந்திரும்புதலைப் பிரசங்கித்தார். **"நீதிமான்களையல்ல"** பாவிகளையே மனந்திரும்பும்படி அழைக்க வந்தேன் (மத்.9:13, லூக்.13:3,5).

லூக்கா 13:1-2 பலிசெலுத்தும்போது அவர்களை பிலாத்து கொன்றுவிட்டான் என்று இயேசு குறிப்பிடுகிறார். அவர்கள் மற்றவர்களை விட பெரிய பாவிகளல்ல. எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்றார் (13:3)

லூக்கா 13:4-ல் இயேசு சீலோவாம் கோபுரம் சிலர் மீது விழுந்ததைப் பற்றி குறிப்பிடுகிறார். அவர்களும் மற்றவர்களைக் காட்டிலும் பெரிய பாவிகளல்லர் எல்லாரும் மனந்திரும்பவேண்டும் (லூக்.13:5).

திரும்பத் திரும்ப சொல்லப்பட்ட அவ்வார்த்தைகள் பரிசுத்த ஆவியானவர் நாம் அந்த செய்தியை தவறவிட்டுவிடக் கூடாது என்பதற்காக ஆலோசனை கூறுகிறது.

3. பேதுரு மனந்திரும்புதலைப் பிரசங்கித்தார். (அப்.2:38) **தாமதிக்கிறார்**



இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் அவருடைய ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகிறார்கள். "தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். ஆகையால் அசட்டைபண்ணுகிறவன் மனுஷரை அல்ல, தமது பரிசுத்த ஆவியை நமக்குத் தந்தருளின தேவனையே அசட்டைபண்ணுகிறான்" (1தெச.4:7,8). தேவனுடைய அழைப்பையும் அவருடைய எதிர்பார்ப்பையும் முதலாவது ஒவ்வொருவரும் புரிந்துகொள்ளவேண்டும். இவைகளை புரியாத ஒருவர் அவருக்கேற்ற பாத்திரமாக வாழ்வது கூடாதகாரியம். பாவத்திலே ஒவ்வொருநாளும் முழ்கிக்கொண்டிருக்கும் ஜனங்களை இந்த உலகத்திலிருந்து தம்முடைய குமாரன் மூலமாக அவர்களை இரட்சிக்கும்படியாக தேவன் திட்டம் கொண்டார். ஆகையால் பழுதில்லா அவரை இந்த உலகத்தின் பாவத்திற்காக மரிக்கும்படி ஒப்புக்கொடுத்தார். அவருடைய மரணத்தினால் நாம் பாவத்திலிருந்து விடுதலையாகிறோம். நாம் செய்த நற்காரியங்களினாலோ அல்லது தானதர்மங்களினாலோ நாம் இரட்சிக்கப்படவில்லை. ஆண்டவர் இயேசு சிலுவையில் சிந்தின இரத்தித்தினாலே பாவமன்னிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக்கொள்கிறோம்.

மேலும் பவுல் சொல்லும்போது; "சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, கிறிஸ்து இயேசுவுக்குள் தேவன் அழைத்த பரம அழைப்பின் பந்தயப்பொருளுக்காக இலக்கை நோக்கித் தொடருகிறேன். ஆகையால் நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக்கடவோம்; எந்தக் காரியத்திலாவது நீங்கள் வேறே சிந்தையாயிருந்தால், அதையும் தேவன் உங்களுக்கு வெளிப்படுத்துவார்" (பிலி.3:13-15). பழைய காரியங்கள் நமக்கு இரட்சிப்பை கொண்டுவராது. அவைகளை நாம் மறந்து நமக்கு முன்பாக வைக்கப்பட்டுள்ளவைகளை நாம் நோக்கிப்பார்த்து வெற்றிநடைபோடவேண்டும். அநேகர் பின்னிட்டுப்போவதற்கு காரணம். பின்னானவைகளையே திரும்பிப்பார்ப்பது. பின்னிட்டுப்பார்த்தவர்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களை இழந்தார்கள் என்றே நாம் வேதத்தில் படிக்கிறோம். லோத்தின் மனைவி பின்னிட்டுப் பார்த்து உப்புத்தூண் ஆகிவிட்டாள். இஸ்ரவேலரில் அநேகர் எகிப்தை பின்னிட்டுப்பார்த்து கானானை இழந்தார்கள். ஆண்டவரும் கலப்பையின் மேல் கைவைத்துவிட்டு பின்னிட்டுப்பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவன்அல்ல என்கிறார். தேவன் நம்மை மேன்மையான காரியத்திற்கு அழைத்திருக்கிறார். கீழானவைகளை பார்த்து வீணாகிவிடக்கூடாது. தேவனுடைய மேலான ஆசீர்வாதங்களைப் பெறுவதற்கு அவைகள் தடைகளாகவே இருக்கும். ஆகையால் தேவனுடைய இந்த பரிசுத்த அழைப்பை அசட்டை பண்ணாமல் கீழ்ப்படிந்து அவருக்கு உகந்த பாத்திரமாக மாறபிரயாசப்படுங்கள்.

**மூன்றாவது எச்சரிப்பைப்** பார்க்கிறோம். "தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல, நாங்கள் உங்களில் ஒவ்வொருவனுக்கும் புத்தியும் தேறுதலும் எச்சரிப்பும் சொன்னதை அறிந்திருக்கிறீர்கள்" என்கிறார் (1தெச.2:12). ஒரு நல்ல போதகன் ஒரு விசுவாசியும் கெட்டுப்போய் விடக்கூடாது என்பதற்காக அவர்களை நல்வழிபடுத்த பிரயாசப்படுவான். சபையானது ஒரு குடும்பத்தைப்போன்றது. அது ஆவிக்குரிய குடும்பமாகவே இருக்கிறது. குடும்பத்தில் உள்ள ஒருவன் கெட்டுப்போவதை எந்த ஒரு தகப்பனும் விரும்பமாட்டான். ஆகையால் பவுல் இங்கு

தகப்பன் தன் பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல புத்திமதிகளையும் எச்சரிப்பையும் கொடுக்கிறார். ஒரு தகப்பன் ஒரு காரியத்தைச் சொல்லி எச்சரித்தால் அக்குடும்பத்தில் உள்ள பிள்ளைகள் அதற்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள் அல்லவா, அதைப்போல ஆவிக்குரிய குடும்பத்தில் இருக்கிற நாம் கர்த்தருடைய ஊழியக்காரர்கள் சொல்லுகிற காரியங்களுக்கு கீழ்ப்படிந்து நம்மை மாற்றியமைத்துக்கொள்ளவேண்டியவர்களாயிருக்கிறோம். நமக்கு நன்மை உண்டாயிருக்கும்படி அவர்கள் ஊழியக்காரர்களாயிருக்கிறார்கள். முற்பிதாக்களின் காலத்தில் கர்த்தர் தம்முடைய தீர்க்கதரிசிகளைக்கொண்டு பேசிவந்தார் என்பதை நாம் அறிவோம். எசேக்கியேல் என்ற தம்முடைய தீர்க்கதரிசிமூலமாகபேசும்போது; "மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக" என்றார் (எசே.3:17). இந்த தீர்க்கன் தேவனுடைய நாமத்தினாலே அவர்களை எச்சரித்தான். அவன் சற்றும் யோசிக்கவில்லை. முகதாட்சண்யம் பார்க்கவில்லை. கர்த்தருடைய வார்த்தையை உள்ளபடியாக சொல்லி அவர்களுடைய தவறான காரியங்களைக் குறித்து எச்சரித்தான். அந்தப்படியே பவுல் புத்திமதியான காரியங்களை சொல்லி எச்சரிக்கிறார். எச்சரிக்கப்பட்டவன் செய்யவேண்டுவதென்ன?

மேலும் வாசிக்கிறோம், "அவன் எச்சரிப்படைந்து, தான்செய்த எல்லா மீறுதல்களையும் விட்டுத் திரும்புகிறபடியினாலே அவன் பிழைக்கவே பிழைப்பான், அவன் சாவதில்லை" என்று கர்த்தருடைய வார்த்தை சொல்லுகிறது (எசே.18:28). ஒருவன் தேவனுக்கேற்ற பாத்திரமாயிராதபடியால் கர்த்தருடைய வசனம் அவனை எச்சரிக்கிறது. அந்த எச்சரிப்பின் சத்தத்தைக்கேட்டு அதற்குக் கீழ்ப்படிந்து தன்னைமாற்றியமைத்துக்கொள்ளும்போது அவன் சாகாமல் பிழைக்கவே பிழைப்பான். இது எத்தனை பெரிய ஆசீர்வாதம் என்று பார்த்தீர்களா? தேவன் நம்மிடத்தில் பொன்னையோ பொருளையோ அல்லது நம்முடைய ஜீவனையோ கேட்கவில்லை. எச்சரிப்படைந்து நம்முடைய மீறுதல்களை விட்டு நாம் திரும்பும்போது நீடித்த நாட்களாய் கர்த்தரோடு வாழும் பாக்கியத்தை பெறுகிறோம். ஆகையால் எனக்கு அன்பான சகோதரனே, சகோதரியே நீ கர்த்தருக்கு ஏற்ற பாத்திரமாக வாழ பிரயாசப்படு. உன்னை அழைத்த தேவன் பரிசுத்தமுள்ளவர். அவர் இருக்கிற இடமும் பரிசுத்தமுள்ளது. நீ அதில் பிரவேசிக்க உன்னை அவர் அழைத்திருக்கிறார். "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது" என்கிறார் (வெளி.22:12). உன்னுடைய கிரியைகள் எப்படிப்பட்டவை களாயிருக்கிறது. அதற்கேற்ற பலன் கர்த்தரோடு வருகிறது. உன்னுடைய அழைப்பை சீர்தூக்கிப்பார். கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்து அவருடைய எச்சரிப்பின் சத்தம்கேட்டு உன்னை ஆயத்தப்படுத்து.

**கனத்துக்குரிய பாத்திரமாயிருக்க நாம் செய்யவேண்டியதென்ன?**

"ஒரு பெரிய வீட்டிலே பொன்னும் வெள்ளியுமான பாத்திரங்களுமல்லாமல், மரமும் மண்ணுமான பாத்திரங்களுமுண்டு; அவைகளில் சில கனத்திற்கும் சில கனவீனத்திற்குமானவைகள். ஆகையால் ஒருவன் இவைகளை விட்டு, தன்னைச் சுத்திகரித்துக்கொண்டால், அவன் உபயோகமானதும், எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனத்துக்குரிய பாத்திரமாயிருப்பான்" என்கிறார் பவுல் (2தீமோ.2:20,21). சீர்கேடான வீண்பேச்சுகளுக்கும், கள்ளப்போதனைகளுக்கும்,




இந்திய அஞ்சல் துறை

திண்டுக்கல் அஞ்சல் கோட்டம்

திண்டுக்கல் - 624 001

**பொன்மகன் பொதுசேமிப்பு நிதியம்**

**(PUBLIC PROVIDENT FUND)**

அன்புடையீர்,

வணக்கம். இந்திய அஞ்சல் துறையில் உள்ள சேமிப்பு திட்டங்களில் நீண்ட கால சேமிப்பு திட்டமான பொது வைப்பு திட்டம் என்னும் **பொன்மகன் பொது வைப்புத் திட்டம்** நிறைந்த பயனளிக்கும் ஒன்று ஆகும். இத்திட்டத்தில் சேர வயது வரம்பு கிடையாது.

**திட்டத்தின் சிறப்புகள்**

1. 2017-18 ஆம் ஆண்டில் 7.9 % வட்டி வழங்கப்படுகிறது.
2. இதில் குறைந்த அளவாக ரூ. 500ம் அதிக அளவாக 1,50,000/-ம் சேமிப்பு செய்யலாம்.
3. சேமிப்பை மொத்தமாகவோ 12 தவணைகளிலோ செலுத்தலாம்.
4. வாரிசு நியமன வசதி உண்டு.
5. ஒரு நிதியாண்டில் சேமிப்பாளர் தனது குழந்தைகளின் பெயரில் மேலும் ஒரு கணக்கினை தொடங்கலாம். மொத்த சேமிப்புத் தொகை அதிக அளவான ரூ.1,50,000/-க்குள் இருக்கவேண்டும்.
6. முடிவுறும் காலம் 15 நிதிஆண்டுகள், 15 நிதிஆண்டுகள் முடிந்ததும் மேலும் 5 ஆண்டுகள் வீதம் நீட்டித்துக் கொள்ளலாம்.
7. முதிர்வுத் தொகையை நீட்டிப்பு இல்லாமலும் மேலும் 5 ஆண்டுகள் வைத்துக்கொள்ளலாம்.
8. செலுத்தும் தொகைக்கு வருமான வரி விலக்கு உண்டு (80-C)
9. கணக்குத் துவங்கிய ஏழாவது ஆண்டிலிருந்து ஆண்டுதோறும் 50 % பணம் எடுத்துக் கொள்ளும் வசதி உண்டு.
10. முன் முதிர்வு செய்யும் வசதி உண்டு.

**மேலும் விபரங்களுக்கு அருகிலுள்ள அஞ்சலகங்களை அணுகவும்.**

தொடர்புக்கு : 0451 - 2432402, 2422642
04545 - 2423304

**முதுநிலை அஞ்சல் கோட்ட கண்காணிப்பாளர்**
**திண்டுக்கல் கோட்டம், திண்டுக்கல் 624 001**




JOIN OUR WORLD EVANGELISM BIBLE SCHOOL RIGHT NOW

Contact:
94435 58041

ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார் யோவான்12:26

**"தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை"– ரோமர் 13:1**

ஜெபியுங்கள்

- ஒவ்வொரு மாதமும் நடைபெற்றுவரும் வாசகர் கருத்தரங்கு மாவட்டங்கள் தோறும் சிறப்பாக நடைபெற்று வருவதற்காக...
- புதிய வருட ஊழியங்களுக்காக...
- புது வருடத்தில் தேவன் நமக்குக் கொடுக்கும் ஆத்துமாக்களுக்காக...

**கர்த்தருடைய திராட்சத்தோட்டத்தில் வேலை செய்ய வாலிப சுவிசேஷகர்கள் தேவை. உணவும், உடையும், மற்றும் உறைவிடமும் கொடுக்கப்படும்.**

**இயேசு சொல்கிறார்:**

"ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனானால் என்னைப் பின்பற்றக்கடவன், நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார்" யோவான்12:26.தொடர்புக்கு :94435 58041

**"கற்பனையைக் கைக்கொள்ளுகிறவன் ஒரு தீங்கையும் அறியான்" நீதிமொழிகள் 8:5**

### கேள்விகள்

1. இருதயத்திலிருந்து மெய்யாக ஆராதிப்பது எவ்வாறு கிறிஸ்தவனிடத்தில் மாறுதலை ஏற்படுத்துகிறது?
2. என்னென்ன வழிகளில் அவன் தேவனுடைய மாதிரியை பின்பற்ற வாஞ்சிக்கிறான்?
3. அவனுடைய அனுதின ஜீவியம் -------------- ஆகிறது, தேவனோடு கைகோர்த்து நடக்கிற பொழுது.
4. ஒரு பாவ ஜீவியம் மெய்யான சந்தோஷத்தை கொண்டு வருகிறதா?
5. ஒரு கிறிஸ்தவனை சூழ்ந்திருக்கிவர்களிடம் இருந்து அவனை வேறுபடுத்திக் காட்டும் சில குணாதிசயங்கள் என்ன?
6. ஒரு கிறிஸ்தவன் தேவனுக்கு ஊழியம் செய்கிறதிலே மாயமற்றவனாக இருப்பதும் இரகசியமான உள்ளெண்ணங்கள் இல்லாமல் இருப்பதும் ஏன் முக்கியமானதாய் இருக்கிறது?
7. தேவன்"------------------------------------------------------------------ ---------------------------------------------" என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார்?
8. நம்முடைய சரீரங்கள் என்னவென்று அழைக்கப்படுகின்றன?
9. கிறிஸ்தவத்தின் உயர்வு என்ன?
10. கிறிஸ்தவர்கள் --------------------- ------------------------- நம்முடைய சொந்த --------------- பார்க்கவும் -------- புறம்பேயிருக்கிறவர்களைப் பற்றி---------------------- ------ நடந்து ----------- வேண்டியதாயிருக்கிறது.
11. நம்முடைய ஜீவியங்களில் தேவ ஆவியினுடைய பலன் என்னவாக இருக்கிறது?
12. எருசலேமிலிருந்த சபையில் தேவையோடு இருந்தவர்களுக்கு சபையார் என்ன செய்தார்கள்?
13. காவலில் இருக்கிறவர்களுக்கு ஊழியஞ்செய்ய கிறிஸ்தவர்களுக்கு கட்டளையிடப்பட்டு இருக்கிறதா?
14. கிறிஸ்தவம் என்பது ஒரு ------------------ கிறிஸ்தவனின் வாழ்க்கைக்கு மற்றும் அவன் உலகிற்கு ஒரு --------------- இருக்கிறது.
15. ஆகையால் ----------------------, நாம் செய்வோம் --------------------- --க்கு தக்கதாக விசேஷமாக ------------------ ---------------- ------- - செய்யக்கடவோம்.


**தென் மாவட்ட வாசகர்களுக்கு!**

நீங்கள் சகோதரரை சந்திக்கவும் ஆவிக்குரிய ஆலோசனைகளை பெறவும் விரும்பினால் ஒவ்வொரு மாதமும் 9 மற்றும் 10 தேதிகளில் வத்தலக்குண்டு தி வேர்ட் ஆப் கிரைஸ் அலுவலகத்தில் வந்து சந்திக்கலாம். ஒருநாள் தங்குவதற்கு அனைத்து ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்படும். மேலும் இரண்டு நாளும் கர்த்தருக்கு ஊழியம் செய்யவும் வேதாகமத்தை நன்கு கற்றுக்கொள்ளவும் ஒரு அருமையான வாய்ப்பு. மொபைல் மூலமாக தொடர்பு கொண்டு பிறகு வரவும். நன்றி. 9443558041

**தமிழகத்தின் வட மாவட்ட வாசகர்களுக்கு!**

ஒவ்வொரு மாதமும் கடைசி சனி மற்றும் ஞாயிற்று கிழமைகளில்...

கிறிஸ்துவின் சபையார் கூடுமிடம், செல்வம் பேப்பர் ஸ்டோர், 38 மேயர் சிட்டிபாபு தெரு, எல்லிஸ்ரோடு, திருவல்லிகேணி, சென்னை 600 005. 9443558041




அவபக்திக்கும், அநியாயத்திற்கும் விலகி ஒருவன் தன்னை கிறிஸ்துவின் இரத்தத்தினாலே சுத்திகரித்துக்கொண்டால் அவன் தேவனுக்கு உபயோகமானதும் எந்த நற்கிரியைக்கும் ஆயத்தமாக்கப்பட்டதுமான கனதுக்குரிய ஒரு பாத்திரமாக கர்த்தருடைய சபையில் இருப்பான். நீங்கள் எப்படிப்பட்டவர்களாக இருக்கிறீர்கள்? தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லாமே இந்த உலகத்தில் பயனுள்ளவைகளாக இருக்கிறது. நீ தேவனால் கர்த்தருக்குள்ளாக புது சிருஷ்டியாக இருப்பாயானால் உன்னைக் கொண்டு கர்த்தர் பெரிய காரியங்களைச் செய்ய சித்தமுள்ளவராயிருக்கிறார். இன்றே உன்னை அவருக்கு ஒப்புக்கொடு. அவர் தமக்கேற்ற கனத்துக்குரிய பாத்திரமாக உன்னை அவருடைய ராஜ்யத்தின் பணியில் பயன் படுத்துவார். நீ ஆசீர்வாதமாயிருப்பாய். உங்களுக்காக நாங்கள் ஜெபிக்கிறோம்.

- **உலக மக்கள் தொகையில் பாதிப்பேரின் ஒரு நாள் வருமானம் 150 ரூபாய்க்கு கீழ் உள்ளது.**
- **ரயிலுக்கு முன் நின்று 'செல்பி' எடுப்பவர்கள் இனி 2,000/- ரூபாய் அபராதம் செலுத்துவதுடன் ஆறு மாத சிறைத் தண்டனையையும் அனுபவிக்க நேரிடும் என வடக்கு ரயில்வே எச்சரித்துள்ளது.**
- **எரிசக்தித் துறையில் மிகவும் பிரசித்தி பெற்ற இந்தியன் ஆயில் நிறுவனம் ஐ.ஓ.சி.எல்., என்ற பெயரால் பெரும்பாலும் அறியப்படுகிறது. பொதுத்துறை சார்ந்த இந்த நிறுவனம் 500 சர்வதேச பிரம்மாண்ட நிறுவனங்களுள் ஒன்றாகவும் திகழ்கிறது.**

நடப்புச் செய்திகள்


**நம்பிக்கை TV சேனலில்**

**திங்கள் & சனிக்கிழமை மாலை 7.30 மணி முதல் மற்றும் தமிழன் TV ல் புதன் கிழமை மாலை 6.15 மணிமுதல் 'தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்' நிகழ்ச்சிகளைப் பாருங்கள்**

**9443558041**

'ஒரே வழி' வேதபாடம் **The Master Course**
படிக்க விரும்புகிறவர்கள்
இன்றே தபால் செலவுக்காக
ரூபாய் 50-ஐ அனுப்பி,
ஒரு வருடத்தில் பயின்று **Certificate**
பெற்றுக்கொள்ளுங்கள் வயது: 20 க்கு மேல்.
**Batlagundu Bible College, P.O. Box No. 5, Batlagundu-624 202, South India.**


தெரிந்து கொள்வோம்

## பெயர்கள் உருவான விதம்

K.R.K.Ravi Asir

**▶ ஜாகர்த்தா (இந்தோனேஷியா)**

டச்சுக்காரார்களால் 1619ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இந்நகரம் 1949ம் ஆண்டில்தான் தலை நகரமாக மாறியது. 'ஜெய கீர்த்தி' என்ற சமஸ்கிருதச் சொல்லில் இருந்து இப்பெயர் வந்தது.

**▶ பம்பாய் (இந்தியா – மஹாராஷ்டிரா)**

'பாம் பாஹியா' என்ற போர்த்துக்கீசிய சொல் ' நல்ல துறைமுகம்' என்று பொருளாகும். இது நாளடைவில் ' பம்பாய்' என மருவியது. இப்பொழுது மும்பை என அழைக்கப்படுகிறது.

**▶ டோக்கியோ (ஜப்பான்)**

இது 1466ம் ஆண்டில் உருவாக்கப்பட்ட நகரமாகும் 'டோக்கியோ' என்றால் 'கிழக்கு தலைநகர்' என்று அர்த்தமாகும்.


தேவ செய்திகள் அடங்கிய CD & DVD எங்களிடம் உள்ளது ரூ.100/- அனுப்பி பெற்றுக்கொள்ளுங்கள் உங்கள் முகவரி மற்றும் மொபைல் எண்ணை SMS பண்ணவும். **9443558041**



# பரலோகத்திற்கு ஏன் ஒரே ஒரு வழி மாத்திரமே உண்டு

J.C.Choate




மத உலகில் "பரலோகத்திற்கு பல வழிகள் உள்ளன", "நாம் அனைவரும் பல்வேறு வழிகளில் பயணம் செய்கிறோம், ஆனால் நாமனைவரும் ஒரே இடத்திற்குச் செல்லவே முயற்சிக்கிறோம்" இன்னும் இது போன்ற பல கூற்றுகளை நாம் அடிக்கடி கேள்விபடுகிறோம். குறிப்பாக இதைக் குறித்து நீங்கள் விடாது சிந்திப்பீர்களென்றால் பூமியிலே இந்த கூற்று நல்லதே, ஆனால் வேதாகம போதனைக்கு இது முற்றிலும் புறம்பானது.

வேதாகமம் பரலோகத்தைப் பற்றியும், அதன் எல்லா அழகைப் பற்றியும், வரப்போகிற உலகத்தில் கர்த்தருடைய ஜனங்களுக்காக அது எவ்வாறு ஆயத்தமாக்கப்பட்டிருக்கிறது என்பது பற்றியும் சொல்லுகிறது. கிறிஸ்து, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள். என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன் நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணினபின்பு, நான் இருக்கிற இடத்தில் நீங்களும் இருக்கும்படி, நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்ளுவேன்" (யோவா.14:1-3) என்றார். ஆனபடியினால், கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டுள்ளோர்களும் அவர் ஆயத்தம்பண்ணியிருக்கிற பரலோகத்தில் நம்பிக்கை கொண்டுள்ளோர்களும் நிச்சயமாகவே அங்கு செல்ல விரும்புவார்கள். ஆனால் கேள்வியானது, நாம் அங்கே எப்படிச் செல்ல முடியும்? அங்கு செல்ல ஒரே ஒரு வழி மட்டுமே உள்ளதா, அல்லது பல வழிகள் உள்ளனவா? என்பதே. மீண்டும் இயேசு, "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவா.14:6) என்றார். கவனியுங்கள் இயேசுவே வழி, பிதாவினிடத்தில் செல்லுவதற்கு ஒரே வழி அவரே, கிறிஸ்துவினாலே அல்லது கிறிஸ்துவின் மூலமாய் மட்டுமே ஒருவன் பிதாவினிடத்திற்குச் செல்ல முடியும். பிதாவினிடத்தில் செல்ல பல வழிகள் இருந்திருக்குமானால், பிறகு கிறிஸ்து ஒரே வழியாக இருந்திருக்கமாட்டாரே.

இயேசு தம்மை நல்ல மேய்ப்பராகவும், கிறிஸ்தவர்கள் ஆடுகளாகவும், சபை ஆட்டுத்தொழுவமாகவும் இருக்கிறதாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். இப்பொழுது வாசலைப் பற்றி கிறிஸ்து என்ன சொல்லுகிறாரென கேளுங்கள்; "நானே ஆடுகளுக்கு வாசல் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்" (யோவா.10:7). இயேசு தொடர்ந்து விளக்கும் வண்ணமாக, "நானே வாசல், என் வழியாய் ஒருவன் உட்பிரவேசித்தால், அவன் இரட்சிக்கப்படுவான், அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டைவான்" (யோவா.10:9) என்கிறார். மேலும் அவர் "மெய்யாகவே, மெய்யாகவே, நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; ஆட்டுத் தொழுவத்துக்குள்



உம்முடைய தாகத்தைத் தீர்த்தோம்? எப்பொழுது உம்மை அந்நியராகக் கண்டு உம்மைச் சேர்த்துக்கொண்டோம்? எப்பொழுது உம்மை வஸ்திரமில்லாதவராகக்கண்டு வஸ்திரங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மை வியாதியுள்ளவராகவும் காவலிலிருக்கிறவராகவும் கண்டு, உம்மிடத்தில் வந்தோம் என்பார்கள்".

"அதற்கு ராஜா பிரதியுத்தரமாக; மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்"

"அப்பொழுது இடது பக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து அவர்: சபிக்கப்பட்டவர்களே என்னை விட்டு பிசாசுக்காகவும் அவன் தூதர்களுக்காகவும் ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற நித்திய அக்கினியிலே போங்கள். பசியாயிருந்தேன் நீங்கள் எனக்குப் போஜனங்கொடுக்கவில்லை; தாகமாயிருந்தேன் நீங்கள் என் தாகத்தைத் தீர்க்கவில்லை; அந்நியனாயிருந்தேன் நீங்கள் என்னைச் சேர்த்துக் கொள்ளவில்லை, வஸ்திரமில்லாதிருந்தேன் நீங்கள் எனக்கு வஸ்திரங் கொடுக்கவில்லை; வியாதியுள்ளவனாயும், காவலிலடைக்கப்பட்டவனாயும் இருந்தேன். நீங்கள் என்னை விசாரிக்கவில்லையென்பார்"

"அப்பொழுது அவர்களும் அவருக்குப் பிரதியுத்தரமாக: ஆண்டவரே; உம்மைப் பசியுள்ளவராகவும், தாகமுள்ளவராகவும், அந்நியராகவும், வஸ்திரமில்லாதவராகவும், வியாதிப்பட்டவராகவும், காவலிலடைக்கப்பட்டவராகவும், நாங்கள் எப்பொழுது கண்டு உமக்கு உதவிசெய்யாதிருந்தோம் என்பார்கள்"

"அப்பொழுது அவர் அவர்களுக்குப் பிரதியுத்தரமாக: மிகவும் சிறியவர்களாகிய இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்யாதிருந்தீர்களோ, அதை எனக்கே செய்யாதிருந்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்".

"அந்தப்படி இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும், நீதிமான்களோ நித்திய ஜீவனை அடையவும் போவார்கள் என்றார்".

## உலகிற்கு தேவனுடைய தொடர்ச்சியான ஈவு

ஒரு கிறிஸ்தவனுடைய ஜீவியத்தில் இந்த குணாதிசயங்கள் தேவனால் விரும்புகிறபடியால் நாளுக்கு நாள் என்ற அடிப்படையில் அவனுடைய நடத்தை எல்லா இடங்களிலும் பரவி இந்த உலகில் அவனது நல் வாழ்க்கை நன்மைக்கான ஒரு வல்லமையாக இருக்கிறது. அவன் சத்தியத்தை பேசுவான், சத்தியத்திலே ஜீவிப்பான்; மற்றவர்களுடனே அவனுக்குள்ள ஈடுபாடுகளை நேர்மையானது ஆளுகை செய்யும்; திக்கற்றவர்களுக்கும், தேவையுள்ளவர் களுக்கும் மன உருக்கமானது அவனுடைய கரங்களை திறக்கச் செய்யும்; மனுஷ ஆத்துமாக்களில் அன்பு கூரச் செய்து சுவிசேஷத்தின் நற்செய்தியானது தேவனுடைய குடும்பத்திலே ஒரு பாகமாக இல்லாதவர்களிடத்தில் பகிர்ந்து கொள்ளும்படி தூண்டுதல் செய்யும். ஒவ்வொருவகையிலும் கிறிஸ்தவனுடைய ஜீவியம் ஆசீர்வதிக் கப்பட்டதாயிருக்கிறது, அவன் உலகத்திற்கு ஒரு ஆசீர்வாதமாக இருக்கிறான்.

"ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாசகுடும்பத்தார்களுக்கும் நன்மை செய்யக் கடவோம்" (கலா.6:10).

பாடம் -13

## ஆராதனை நிறைந்த ஜீவியம்

## The Worshipful Life

-சென்ற மாத இதழின் தொடர்ச்சி -Betty




**பெண்கள் பகுதி**

இந்த போதனைகள் அன்றாட ஜீவியத்தின் எல்லா பாகங்களையும் உள்ளடக்கியதாக இருக்கிறது. நாம் மனுஷ சமுதாயத்தின் ஒரு சமுத்திரத்தில் ஜீவிக்கிறோம். நம்மை சுற்றியிருக்கின்ற அனைத்து சூழ்நிலைகள், நம்முடைய கவனம், எதிர்நோக்குகின்ற தேவைகள் மேலும் அடிக்கடி நம்முடைய தலையிடுதலும், உதவியுமாக இருக்கின்றன. ஆலோசனை தேவையாயிருக்கிற சக கிறிஸ்தவர்களை நாம் காண்கிறோம். நாம் அவர்களை சென்றடையவும், அவர்களுடைய பாடுகளின் மத்தியில் அவர்களுக்கு தயவோடும் ஞானத்தோடும் உதவி செய்ய சமயம் எடுத்துக்கொள்ள வேண்டியவர்களாயிருக்கிறோம்.

பாடுபடுகிறவர்களின் மத்தியிலே ஒரு பாகமாக இயற்கை பேரழிவுகள் அல்லது உதவியற்ற நிலையிலிருக்கிறவர்களுக்கான பூமிக்குரிய தேவைகளை நாம் காண்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் பணத்தை, உடைமைகளை நேரத்தை உதவி என்று வருகிற பொழுது தங்களுக்கு தாங்களே உதவிசெய்ய இயலாத நிலையில் இருக்கிறவர்களுக்கு உதவி செய் வேண்டியவர்களாயிருக்கிறோம்.

இந்த மனந்திறந்த நிலையிலான ஒரு முன்மாதிரியை நாம் அப்.4:34-37 வசனங்களில் காண்கிறோம். அந்த சூழ்நிலையில் யூதர்கள் மிகுந்த தூரத்திலிருந்த பல இடங்களிலிருந்து எருசலேமுக்கு பெந்தெகொஸ்தே பண்டிகைக்காக வந்தார்கள். அவர்கள் சுவிசேஷத்தைக்கேள்விப்பட்டு முதல் கிறிஸ்தவர்களாக மாறினார்கள். புதிய விசுவாசத்தை அவர்கள் அதிகமாக கற்றுக் கொள்ளத்தக்கதாக அவர்கள் தங்கியிருக்கும் காலம் நீடித்துக் கொண்டிருந்தபடியால், அவர்களுடைய அன்றாட அத்தியாவசியமான தேவைகள் சந்திக்கப்பட வேண்டிய நிலையிலிருந்தார்கள். இதன் பொருட்டு கிறிஸ்தவர்கள் நிலங்கள் மற்றும் உடமைகளை விற்று ஒன்றுமில்லாதவர்களோடு அவைகளை பகிர்ந்துகொண்டார்கள். பின்னர் ஏற்பட்ட உபத்திரவம், மற்றும் கஷ்டத்தின் காரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் மக்கெதோனியா, கொரிந்து பட்டணங்களின் சபைகளிலிருந்தும் பணத்தை சேகரித்து எருசலேமிலிருந்த பிராந்திய சபைக்கு உதவி செய்யும்படியாக வந்தார். (2கொரி.9; ரோம.15:31).

**மத்.25:34-46 வசனங்களில் இயேசு போதித்தார்.**

"அப்பொழுது ராஜா தமது வலதுபக்கத்தில் நிற்பவர்களைப் பார்த்து வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளுங்கள். பசியாயிருந்தேன் எனக்குப் போஜனங்கொடுத்தீர்கள்; தாகமாயிருந்தேன்; என் தாகத்தைத் தீர்த்தீர்கள், அந்நியனாயிருந்தேன் என்னைச் சேர்த்துக்கொண்டீர்கள், வஸ்திரமில்லாதிருந்தேன் எனக்கு வஸ்திரங்கொடுத்தீர்கள், வியாதியாயிருந்தேன் என்னை விசாரிக்க வந்தீர்கள்; காவலிருந்தேன் என்னைப் பார்க்க வந்தீர்கள் என்பார்"

"அப்பொழுது நீதிமான்கள் அவருக்குப் பிரதியுத்தரமாக ஆண்டவரே, நாங்கள் எப்பொழுது உம்மைப் பசியுள்ளவராகக் கண்டு உமக்குப் போஜனங்கொடுத்தோம்? எப்பொழுது உம்மைத் தாகமுள்ளவராகக் கண்டு



வாசல் வழியாய்ப் பிரவேசியாமல், வேறுவழியாய் ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான்'' (யோவா.10:1) என்கிறார். வேறு வார்த்தைகளில், அவர் ஆட்டுத்தொழுவத்திற்கு வாசலாகவும், ஆனால் வேறுவழியாக ஏறுகிறவன் கள்ளனும் கொள்ளைக்காரனுமாயிருக்கிறான் என்றும் இயேசு சொல்லுகிறார். ஆனால் முடிவிலே கள்ளர்களுக்கும் கொள்ளைக்காரர்களுக்கும் என்ன சம்பவிக்கும்? அவர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி தேவனுக்குக் கீழ்ப்படியாத வரைக்கும் அவர்கள் தேவனுடைய இராஜ்யத்திற்கு அல்லது சபைக்கு அல்லது பரலோகத்திற்கு நுழைவதற்குக் கூட தகுதியற்றவர்களாயிருப்பார்கள். நிச்சயமாக, கர்த்தர் அருளிய வழியை விட்டு வேறு வழியில் பரலோகத்திற்குச் செல்ல ஒருவன் முயற்சித்தால், அந்த மனிதன் நரகத்திலே தள்ளப்படுவான்.

இன்னொரு சமயத்தில், இயேசு தம்மை சூழ்ந்திருந்த ஜனங்களுக்கு, ''இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசியுங்கள்; கேட்டுக்குப் போகிற வாசல் விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது; அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் அநேகர். ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது; அதைக் கண்டு பிடிக்கிறவர்கள் சிலர்'' (மத்.7:13,14) என்றார். இயேசு ஒவ்வொருவரையும் இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கும்படி உற்சாகப்படுத்துவதைக் கவனியுங்கள். இந்த இடுக்கமான வாசல் கிறிஸ்துவை, சபைக்குள் பிரவேசிப்பதற்கான வழி மேலும் பரலோகத்திற்குச் செல்லும்படி ஒருவன் கடந்து செல்லுகிற வழியைக் குறிக்கிறது. அவர் தொடர்ந்து இடுக்கமான வாசல் வழியாகச் செல்லுகிறவர்கள் பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிற நெருக்கமான வழியில் தாங்கள் செல்வதைக் கண்டு கொள்வார்கள் என்றார். இந்தக் காரியத்தில், அங்கே ஒரே ஒரு வாசல் மட்டுமே உண்டு, ஒரே வழி மட்டுமே உண்டு, அந்த வழியே பரலோகத்திற்கு அழைத்துச் செல்லும் வழி. யார் அந்த வழியில் இருப்பார்கள்? கிறிஸ்துவில் நம்பிக்கை கொண்டிருப்பவர்கள், கர்த்தருக்குக் கீழ்ப்படிந்திருக்கிறவர்கள், இரட்சிக்கப்பட்டவர்கள், கிறிஸ்தவர்கள், கர்த்தருடைய சபை அங்கத்தினர்கள், தேவ பக்தியுள்ளவர்கள், நீதிமான்களும், பரிசுத்தரும் அத்தோடு கர்த்தரிடத்தில் விசுவாசம் கொண்டிருப்பவர்கள். பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிற குறுகலான மற்றும் இடுக்கமான வழியை அல்லாது வேறு வழியில் யாராவது சென்றிருக்கிறார்களென நம்மால் கற்பனை செய்யமுடியுமா? ஆகவே கிறிஸ்து மற்றொரு பகுதியைக் குறித்துப் பேசுகிறார். அவர் விரிவான வாசல் வழியாக பிரவேசித்து கேட்டுக்குக் கொண்டுசெல்லுகிற விசாலமான வழியில் பயணம் செய்கிறவர்களைக் குறித்துப் பேசுகிறார். யார் துணிச்சலாக இதில் பயணம் செய்வார்கள்? அதிகமானவர், உலகத்தார், மற்றும் பக்தியற்றவர்களே. அவர்கள் தங்களுடைய சுய வழியைப் பின்பற்றும் காரணத்தினால் கிறிஸ்துவினுடைய அதிகாரத்திற்கு மதிப்பளிக்க மறுக்கிறவர்களாயிருக்கிறார்கள். மனிதனால் உருவாக்கப்பட்ட சபைகளில் சேருகிறவர்கள், மனிதருடைய நாமங்களைத் தரித்திருக்கிற சபையில் சேருகிறவர்கள், தங்களுடைய விருப்பத்தின்படி ஆராதிக்கிறவர்கள், இன்னும் இதுபோன்ற காரியங்களைச் செய்கிறவர்கள் தான் விசாலமான வழியே செல்லுகிறவர்கள். அவர்கள், வஞ்சிக்கப்பட்டவர்களும் மற்றவர்களை வஞ்சிக்கிறவர்களும் ஆவர். அவிசுவாசமுள்ள கிறிஸ்தவர்கள் இந்தக் கூட்டத்தில் இருப்பார்கள். ஆனால் இந்தப் பாதை அல்லது வழி எங்கே கொண்டு

செல்லுகிறது? இது நித்திய அழிவிற்குக் கொண்டு செல்லுகிறது. ஐயோ, அநேகர் நேர்மையாகவும் உண்மையாகவும் இருப்பார்கள். அவர்கள் மிகுந்த மத வைராக்கியத்துடன் எல்லாவற்றிலும் சரியாக இருப்பார்கள். ஆனால் அவர்கள் விசாலமான வழியில் பயணிப்பதால் அவர்கள் இழந்துபோனவர்களாய் இருப்பார்கள்.

என்னுடைய நண்பரே, ஒரு பெரிய தலைநகருக்குக் கொண்டு செல்லும் சாலைகள் பல இருக்கலாம், ஆனால் ஒரே ஒரு வழியில் மட்டமே நீங்கள், பயணம் செய்ய வேண்டுமென யாரோ ஒருவர் உங்களோடு ஒப்பந்தம் செய்திருந்தால், நீங்கள் இன்னொரு வழியை தெரிந்துகொண்டால் என்ன நடக்கும்? நீங்கள் சிக்கலில் மாட்டிக்கொள்வீர்களென நான் அஞ்சுகிறேன். அதைப்போலவே, கிறிஸ்து வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரம் படைத்தவராயிருக்கிறார் (மத்.28:18). நாம் அந்த அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்து கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கிற கட்டளைகளைக் கைக்கொண்டு நடக்கும்போது, நாம் அந்த ஒரே வழியைக் கண்டு கொள்வோம். நாம் கர்த்தர் குறிப்பிட்டிருக்கிற வழியில் பயணம் செய்ய வேண்டும்.

பரலோகத்திற்கான வழியைப் பற்றிபேசுகையில் நாம் மனித காரணங்களுக்கேற்ப அதை ஏற்படுத்திக் கொள்ள விரும்புவதே நம்முடைய பிரச்சனையாயிருக்கிறது. நாம் ஒரு நகரத்திற்கு பல சாலைகள் உள்ளன, அவைகள் எல்லாமே அந்த ஒரே நகரத்திற்கே கொண்டு செல்லுகின்றது, ஆகவே ஆவிக்குரிய காரியங்களிலும் நிச்சயமாக இதுவே உண்மை என காரணம் காட்டுகிறோம். மனுஷருடைய நம்பிக்கையிலும், மனித சபைகளிலும், இன்னும் பலவற்றிலும் மற்ற வழிகள் இவ்வாறே தோற்றமளிக்கலாம், ஆனால் இவைகளெல்லாம் பரலோகத்திற்குக்குரிய வழிகள் அல்ல. ஒருவரும் மனிதன் உருவாக்கிய வழிகளின் மூலமாகவும் மனிதன் ஏற்படுத்திய அமைப்புகளின் வழியாகவோ பரலோகத்திற்குச் செல்ல முடியாது. உண்மையான வழியைக்கண்டு கொள்ள நாம் நம்முடைய வேதாகமத்தை வாசிக்கவேண்டியது நமக்கு அவசியமாயிருக்கிறது. கிறிஸ்து, "மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள் ......" (மத்.15:9) என்றார். மீண்டும் கிறிஸ்து, "பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை. அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்பொழுது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை; அக்கிரமச் செய்கைக்காரரே, என்னை விட்டு அகன்று போங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன்" (மத்.7:21-23) என்றார். வேதவாக்கியங்கள் முழுவதும். இதுபோன்ற கூற்றுகள் டஜன் டஜனாக இருக்கின்றன. தேவனுக்குக் கீழ்ப்படியாமல், நம்முடைய வழியில் நடந்து, மனிதனால் ஏற்படுத்தப்பட்ட சபைகளில் சேர்ந்து, மனிதால் ஏற்படுத்தப்பட்ட நாமங்களைத் தரித்துக்கொண்டு, நம்முடைய இஷ்டம்போல் ஆராதனை செய்து, நாம் எவ்வழியிலெல்லாம் பயணம் செய்யவிரும்புகிறோமோ அவைகளில் பயணம் செய்து, ஆனால் அதே சமயம் பரலோகத்திற்குச் செல்கிறோம் என்று ஒரு



பெருகப்பண்ணுவார். எனவே அன்பு சகோதரிகளே, கர்த்தரை அறிந்துள்ள நாம் மற்றவர்களோடு வீண் வாக்குவாதங்களைத் தவிர்ப்போமாக!

யோசுவாவை பார்த்து மோசே, கர்த்தர்தாமே உனக்கு முன்பாகப் போகிறவர், அவர் உன்னோடே இருப்பார், அவர் உன்னை விட்டு விலகுவதுமில்லை, உன்னைக் கை விடுவதுமில்லை; நீ பயப்படவும் கலங்கவும் வேண்டாம். என கர்த்தருக்குள் திடப்படுத்தினான். சகோதரிகளே, நம்மை எப்போதும் கலங்கப் பண்ணுகிறவன் பிசாசு தான். நம்முடைய வாழ்வில் எத்தனையோ கோணங்களில் பிசாசு நம்மைக் கலங்கப்பண்ணுகிறவனாய் இருக்கிறான் என அங்கலாயிக்கிறீர்களா?, வேதம், பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள் அவன் உங்களைவிட்டு ஓடிப்போவான் எனக் கூறுகிறது. ஆம், நாம் தைரியமாய் நின்று பிசாசுக்கு எதிர்த்து நிற்போம். உலகின் எக்காரியமும் நம்மை மேற்கொள்ளவிடாது எதிர்த்து நிற்போமானால் நிச்சயமாய் பிசாசு நம்மை விட்டு ஓடிப்போவான். பிசாசு கொண்டுவருகிறதான சோதனைகளைக் கண்டு நாம் பயப்படவேண்டாம், யூதாசுக்குள் சாத்தான் புகுந்ததுபோல் நமக்குள்ளும் புகுந்துவிட இடமளிக்காமல் கர்த்தருடைய ஆவியானவருக்கு இடமளிக்கும் போது நிச்சயமாய் நாம் பயப்பட வேண்டிய அவசியமில்லை. சத்துருவாகிய பிசாசை ஜெயித்து பரம கானானுக்குள் பிரவேசிப்போம்.

இயேசுவின் கல்லறையைப் பார்க்க வந்த ஸ்திரீகள், இயேசுவின் சரீரத்தைக் காணாமல் கலக்கமடைந்து பயத்துடன் காணப்பட்டனர் ( லூக் 24 : 15). ஏன் தெரியுமா? மாம்சசிந்தையில் இயேசுவை மரித்தோரிடத்தில் தேடினதால் பயப்பட்டார்கள் அன்பான சகோதரிகளே, இன்று நீங்கள் இயேசுவை மாம்சபிரகாரமாகவே எண்ணிக் கொண்டு இருக்கிறீர்களா? இயேசுவை மரித்தோரிடத்தில் தேடிக்கொண்டிருக்கிறீர்களா? அவர்அப்போஸ்தர்களைப் பார்த்து உங்களை திக்கற்றவர்களாய் விடேன் உங்களிடத்தில் வருவேன் சத்திய ஆவியாகிய தேற்றரவாளனை உங்களுக்கு தருவேன் என்று கூறினாரே. அவ்வாறு இருக்க, நம்மை தேற்றி ஆற்றி இம்மானுவேலனாக நம்மோடு கர்த்தர் இருக்கும்போது நாம் உலக காரியங்களை கண்டு பயப்பட வேண்டாம்.


கர்த்தராகிய இயேசுவின் பிறப்பின் போது, தேவதூதன் பயப்படாதிருங்கள் -- எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன். ( லூக் 2:10) என்றான். ஆம் இயேசுவின் பிறப்பு நமக்கு சமாதானத்தையும் சந்தோஷத்தையும் உண்டாக்கும் நற்செய்தி , இயேசுவின் மரணம் நமக்கு இரட்சிப்பின் சந்தோஷத்தை உண்டாக்கும் மீட்பின் செய்தி , இயேசுவின் பரமேறிய சம்பவம் நம்மை தேற்றும்படிக்கு தேற்றரவாளனை அனுப்பிய ஆறுதலின் செய்தி, இயேசுவின் இரண்டாம் வருகை நம்மை நித்திய மகிழ்ச்சிக்குள்ளாக்கும் நித்திய செய்தி. பாருங்கள் ,இயேசுவினிடத்தில் எத்தனை இன்பமுண்டு! அவரிடம் நாம் அன்பு கொண்டிருப் போமானால் வரும் நாட்களைக் குறித்த பயம் நம் மை வாட்டாது."அன்பிலே பயமில்லை; பூரண அன்பு பயத்தைப் புறம்மே தள்ளும்; பயமானது வேதனையுள்ளது, பயப்படுகிறவன் அன்பில் பூரணப்பட்டவன் அல்ல" என யோவான் 4:18 மிக அழகாய் கூறுகின்றார்.

அன்பான சகோதரிகளே; பயப்படாதேயுங்கள் நம்முடைய உள்ளத்தில் பயமிருக்குமானால் நிச்சியமாவே நாம் இயேசுவினிடத்தில் பூரண அன்பு கொண்டிருக்கவில்லை என்று தான் பொருள். வருகின்ற ஆண்டிலிருந்தாவது நம்மை சீர்தூக்கிப்பார்த்து கர்த்தருக்குப் பிரியமானது இன்னதென்று வேதாகமத்தின் உதவியுடன் அறிந்து பயத்தை புறம்பே தள்ளி, ஜீவசனத்தைப் பிடித்துக் கொண்டு சுடர்களைப் போல் பிரகாசிப்போம் " ...நான் உன்னைவிட்டு விலகுவதுமில்லை உன்னைக் கைவிடுவதுமில்லையென்று அவர்சொல்லியிருக்கிறாரே. அதினாலே நாம் தைரியங்கொண்டு; கர்த்தர் எனக்கு சகாயர், நான் பயப்படேன் மனுஷன் எனக்கு என்ன செய்வான் என்று சொல்லலாமே" (எபி.13:5,6). நாம் கர்த்தருடையவர்களாயிருந்து வரும் புத்தாண்டில் கர்த்தரின் அசீர்வாதத்தை பெறுவோமாக!

பெண்கள் பகுதி

# பயப்படாதே - Fear Not

*- Glory Arjunan*




புதிய ஆண்டு எவ்வாறு இருக்குமோ? பழைய ஆண்டின் வருத்தங்களும், சஞ்சலங்களும் தொடருமோ என பயந்து, புதிய ஆண்டில் தேவ ஆசீர்வாதம் கிடைக்காதோ என ஏங்கிக் காத்திருக்கும் சகோதரிகளே பயப்படாதீர்கள்.

கர்த்தரை தெய்வமாகக் கொண்டிருக்கும் சகோதரிகள் பயப்படத் தேவையில்லை. அண்டசராசரங்களை உண்டாக்கி அனைத்தும் தன் தன் வேலைகளை தேவசித்தத்தின்படி தவறாமல் செய்து கொண்டிருக்கப்பண்ணுகின்ற தேவன் உங்களையும் என்னையும் வழிநடத்துவது அதிகநிச்சயமல்லவா? ஆபிரகாம் கர்த்தரை விசுவாசிக்கிற அனைவருக்கும் தகப்பன் அவனை அருமையாக நடத்தினதேவன் அவன் விசுவாசித்த வண்ணமாய்,விசுவாசிக்கிற ஒவ்வொருவரையும் அவ்விதமே நடத்தவல்லவர். புத்தாண்டுக்குள் நுழைய இருக்கிற நாம் நம்மை சீர்தூக்கிப்பார்த்து ஆசீர்வாதங்களை இழந்து போகாதிருப்போமாக!

ஆபிரகாமை நோக்கி,...நீ பயப்படாதே, நான் உனக்குக் கேடகமும், உனக்கு மகாபெரியபலனுமாயிருக்கிறேன் என்றார்(ஆதி.15:1). இவ்விதமான வாக்குத்தத்தினை பெற அவனிடம் இருந்தது விசுவாசமட்டுமல்ல,நற்கிரியையும்கூட. ஆம் ,ஆதி.14:22ல் சோதோம் ராஜாவை பார்த்து அவன் கூறியதை கவனியுங்கள். "....நான் ஒரு சரட்டையாகிலும் பாதரட்சையின் வாரையாகிலும், உமக்கு உண்டானவைகளில் யாதொன்றையாகிலும் எடுத்துக்கொள்ளேன்" என்றான். அப்படியென்றால், இவன் பிறனுக்குள்ள எதையும் இச்சிக்கவில்லை என்றுதானே பொருள். அன்பு சகோதரிகளே,ஸ்திரீகளாகிய நாம் இவ்விஷயத்தில் பெலவீனர்கள் என்றே சொல்ல வேண்டும். ஏனெனில் நமது ஆதித்தாய் ஏவாளிடம் இச்சிக்கிற குணமிருந்ததே. நாமும்கூட அநேக நேரங்களில் நவநாகரிக உலகின் பொருட்களையோ, அல்லது பிறருக்குள்ள ஏதோ சிலவற்றை இச்சித்து இப்பொருள் நமக்கிருந்தால் நன்றாக இருக்கும் எனயோசிக்க ஆரம்பித்துவிடுகிறோம். பிறனுக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருங்கள் என்ற கட்டளையை மறக்க கூடாது. அது பொருட்களாயிருந்தாலும் சரி,வேறுஎதுவாயிருந்தாலும் சரி. இச்சையை தவிர்க்கும் போது நம் தேவன் நமக்கு கேடகமும், மகாபெரியபெலனுமாயிருப்பார் என்பது அதிக நிச்சயம்.

ஆபிரகாமின் தேவன்,ஈசாக்கின் தேவனுமல்லவா! ஈசாக்குக்கு கர்த்தர் தரிசனமாகி "...பயப்படாதே, நான் உன்னோடேகூடஇருந்து என் ஊழியக்காரனாகிய ஆபிரகாமினிமித்தம் உன்னை ஆசிர்வதித்து, உன் சந்ததியைப் பெருகபண்ணுவேன் என்றார் "(ஆதி.26:24) . ஈசாக்கு இவ்வாசீர்வாத வாக்குத்தத்தை எச்சூழலில் பெற்றான்? இவனுடைய வேலைக்காரருக்கும் கேராரூர் மேய்ப்பருக்கும் இடையே துரவு வெட்டின விஷயத்தில் பலமுறை வாக்குவாதம் ஏற்பட்டது. ஈசாக்கோ வாக்குவாதம் பண்ணாதபடி அவ்விடத்தைவிட்டு பெயர்ந்து வேறொரு இடத்திற்கு சென்ற போது கர்த்தர் அவனுக்கு தரிசனத்தில் இந்த ஆசீர்வாதத்தை வாக்குப் பண்ணினார்.அநேக சமயங்களில் தேவனை அறியாத சிலரோடு நாமும் வாக்குவாதம் பண்ணவேண்டியசூழ்நிலை உருவாகிவிடுகின்றது .வேதம் 'வாக்குவாதம் எழும்பும் முன் அதை விட்டு விடு ' என்று கூறுகிறது . ஆம்,நாமும் இவ்விதமாக அதை விட்டு விலகும்போது நம்மைஆசீர்வதித்து நம் சந்ததியைப்



நிமிடம் இப்போது சிந்திப்பீர்களா? நாம் இவ்விதமான காரியங்களை நினைத்துக் கொண்டிருப்போமானால், நிச்சயமாகவே நாம் தவறிழைத்திருக்கிறோம். சவுலைப் பாருங்கள். அவர் மிகவும் பக்தியுள்ளவராக இருந்தார். அவர் தம்முடைய மதத்திற்காக வைராக்கியமுள்ளவராக இருந்தார். அவர் கர்த்தருடைய சபையைத் துன்புறுத்தினாலுங்கூட நல்மனசாட்சியுடையவராக இருந்தார். ஆனால் அவர் தான் தவறு இழைத்தவன் என கண்டுகொண்டார். இதன்காரணமாக அவர் தன்னுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தபோது அவர் இரட்சிக்கப்பட்டார் (அப்.9 மற்றும் 22). ஆனால் கொர்நேலியுவும் அவனுடைய குடும்பத்தாரைப் பற்றியகாரியமென்ன? அவர்கள் நல்ல ஜனங்கள். அவர்கள் தரித்திரர்களுக்கு தானதர்மம் செய்து எப்போதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். இருந்தாலும், பேதுருவின் பிரசங்கத்தைக் கேட்டபிறகு, அவர்கள் இரட்சிக்கப்படும்படிக்கு ஞானஸ்நானம் பெற கட்டளை பெற்றிருந்தார்கள் (அப்.10). பரலோகத்திற்கு கொண்டுசெல்லும் வழி ஒரே வழி என்ற உண்மைக்கு ஆதாரமாக வேதவாக்கியங்களில் பல திருஷ்டாந்தங்கள் உள்ளன.

என்னுடைய நண்பரே, இதைக் குறித்து சிந்தியுங்கள். வேதாகமம், ஒரே தேவனும், ஒரே கர்த்தரும் அல்லது இரட்சகரும், ஒரே பரிசுத்த ஆவியானவரும், ஒரே சரீரம் அல்லது சபை, ஒரே விசுவாசம், ஒரே ஞானஸ்நானம் மேலும் ஒரே நம்பிக்கை எனப் போதிக்கிறது (எபே.4:1-6). வேதாகமம், ஒரே சுவிசேஷம் அல்லது இரட்சிக்கப்பட ஒரே வழி உண்டென்று நமக்கு போதிக்கிறது. கர்த்தர் ஒருவரே இரட்சகர், இரட்சிக்கப்படும்படிக்கு ஒரே காரியத்தைச் செய்ய நம்மெல்லாருக்கும் கட்டளையிட்டிருக்கிறார். எல்லாரும் அவருக்குச் செவிகொடுத்து (மத்.17:5) அவரை விசுவாசித்து (யோவா.8:24), தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி (லூக்.13:3), கிறிஸ்து தேவனுடைய குமாரென்று அறிக்கையிட்டு (மத்.10:32), பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெறும்படிக்கு (மாற்.16:16; அப்.2:38) கட்டளையிடப்பட்டிருக்கிறோம். கிறிஸ்து முழு உலகத்திற்கும் மேலும் உலகத்திலுள்ள சர்வசிருஷ்டிக்குங் கூட ஒரே சுவிசேஷம் பிரசங்கிக்கப்பட வேண்டுமென கட்டளையிட்டிருக்கிறார் (மாற்.16:15,16). கர்த்தர், தாம் கட்டினதும், அதற்காக தாம் மரித்து தம்முடைய சுயஇரத்தத்தினால் சம்பாதித்து, தாம் தலையாகவும், ஒரு நாளில் அதற்காக, திரும்பவும் வருகிறார். அவர் தம்முடைய சபையாகிய அந்த ஒரே சபையில் இரட்சிக்கப்படுகிறவர்களை சேர்க்கிறார் (அப்.2:47; மத்.16:16; எபே.5: அப்.20:28). தேவன் அனைவரும் தம்மை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள விரும்புகிறாரென வேதாகமம் போதிக்கிறது (யோவா.4:24). ஆனபடியினால் அனைவரும் வாரத்தின் முதல் நாளிலே அப்பம்பிட்கும்படிக்கும், தேவனுடைய வார்த்தையைக் கற்றுக்கொள்ளவும், ஜெபிக்கவும், தங்களுடைய வரவுக்குத் தகுந்தவற்றைக் கொடுக்கவும், தேவனைத் பாடித் துதிக்கவும் கூடி வரவேண்டியவர்களா யிருக்கிறோம் (அப்.20:7: 2தீமோ.2:15, அப்.2:45; எபே.5:19). தேவன் தம்முடைய ஜனங்களை, எல்லாவற்றையும் கிறிஸ்துவின் நாமத்தில் செய்யவும் (கொலோ.3:17). அதன்படியே அனைவரும் கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்துக்கொள்ளவும் (அப்.11:26). அனைவரும் விசுவாசமுள்ள கிறிஸ்தவ ஜீவியம் ஜீவிக்கவும் (வெளி.2:10) வேண்டுமென விரும்புகிறார்.

நாம் விசுவாசிப்பதற்கும், கீழ்ப்படிவதற்கும் நம்மனைவருக்கும் ஒரே வேதாகமமே உண்டு. நாம் கர்த்தருக்குக் கீழ்ப்படிந்தால், அவரிடத்தில் கொண்டுள்ள விசுவாசத்தில் நிலைத்திருந்தால், நாம் செல்லுவதற்கு ஒரே பரலோகமும், பாவிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் ஒரே நரகமும் உண்டு (மத்.25:46). இப்போது, மேற்கூறிய அனைத்தும் உண்மையாயிருக்கிறது. நீங்களாகவே வேதவாக்கியங்களை வாசித்து, கற்றுக்கொண்டு பரலோகத்திற்குச் செல்ல எப்படி ஒன்றுக்கு மேற்பட்ட வழிகள் இருக்க முடியும்? என்பதைக் கண்டு கொள்ளுங்கள். ஆம், பரலோகத்திற்குச் செல்ல ஒரு வழி உண்டு, ஆனால் ஒரே ஒரு வழி மட்டுமே உண்டு, அது கர்த்தருடைய வழி. அதை ஏற்றுக்கொள்ள நாம் ஞானமுடையவர்களாயிருப்போம், அத்தோடு பரலோகத்திற்குக் கொண்டு செல்லுகிறதான அந்த வழியில் பயணம் செய்ய கர்த்தர் நம்மை எதைச் செய்யும்படி விரும்புகிறாரோ அதையே செய்வோம். இந்த வழியைத் தவிர நாம் செல்லுவதற்கு வேறே வழியில்லை. ஞானமுள்ள மனிதன், “மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்” (நீதி.14:12) என்றான்.

நீங்கள் எந்த வழியில் பயணம் செய்கின்றீர்கள்? விசாலமான வழியிலா அல்லது குறுகலான வழியிலா? கேட்டுக்குப் போகிற வழியிலா அல்லது பரலோகத்திற்குப் போகிற வழியிலா? ஒரே நேரத்தில் நீங்கள் இருவழிகளில் நடக்கமுடியாது. கிறிஸ்து இரு எஜமான்களுக்கு ஒருவன் ஊழியஞ்செய்ய முடியாது என்றார் (மத்.6:24). நாம் ஒருவனை சேவித்து இன்னொருவனைப் பகைப்போம் (மத்.12:30) என்றார். ஆனடிபயினால் இது ஒருவன் எவ்வழியைத் தெரிந்துகொள்வான் என அவனவனுடைய தீர்மானத்திற்கு விடப்பட்டுள்ளது. நாங்கள் கிறிஸ்துவையும் பரலோகத்திற்குக் கொண்டு செல்லும் வழியையும் தெரிந்துகொள்ளும்படி வேண்டிக்கொள்கிறோம்.

## தமிழகத்தில் ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ நடத்தும் மாவட்ட வாசகர் கருத்தரங்கு

தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் ‘தி வேர்ட் ஆப் கிரைஸ்ட்’ மாத இதழின் வாசகர் கருத்தரங்குகள் கி.பி.2001 முதல் கி.பி 2008 முடிய நடத்தி முடித்து மீண்டும் இரண்டாம் முறையாக 25 மாவட்டங்களிலும் கருத்தரங்குகளை நடத்தி முடித்துள்ளோம்.

மீதமுள்ள மாவட்டங்களில் நடத்தவுள்ளோம். அந்தந்த மாவட்ட வாசகர்கள் தொடர்பு கொண்டு உங்கள் மாவட்டத்திலும் கிறிஸ்துவின் வசனம் தொனிக்க உதவிடுங்கள்.

**கருத்தரங்கு நடைபெறவேண்டிய மாவட்டங்கள்:**

**சிவகங்கை**
**திருவாரூர்**
**திருவண்ணாமலை**
**மதுரை**
**கிருஷ்ணகிரி**
**பெரம்பலூர்**

"இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்;
ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு,
கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து
அவனோடே போஜனம்பண்ணுவேன்,
அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்"
என்றார் – வெளி.3:20

தொடர்புக்கு:
ஆசிரியர்
9443558041






## நமது நண்பர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தல்
## Evangelizing Our Friends
-TVOTI



**நமது நண்பர்களுக்கான ஒரே செய்தி இயேசுவே**
Jesus is the Message to our Friendes
-சென்ற மாத இதழின் தொடர்ச்சி

விடையளித்து இக்கேள்விகள் குறித்து விவாதியுங்கள்:

1. இயேசுவைக்குறித்து இவ்வுலகம் பேச விரும்புகிறதா? ஏன் அதைக் குறித்து சிந்திக்கிறீர்களா?

2. இயேசுவைக் குறித்து அப்போஸ்தலர்கள் அடிக்கடி ஏன் பேசினார்கள்?

3. இயேசுவின் செய்தி ஜெயங்கொள்ளும் என்று நாம் ஏன் அறிகிறோம்?

4. ‘சுவிசேஷம்’ என்ற வார்த்தையின் பொருள் என்ன மேலும் அது எவ்வாறு இயேசுவோடு சம்பந்தப்படுகிறது?

5. இயேசுவை அல்லாமல் வேறொருவராலும் நாம் ஏன் இரட்சிக்கப்பட முடியாது?

6. வேதாகமம் இயேசுவின் ஊழியத்தையும் அதன் முழுமையான ஒத்திருத்தல் பற்றியும் என்ன கூறுகிறது?

7. புதிய ஏற்பாடு முழுவதும் இயேசுவின் போதனைகளை நமக்குத் தருகிறது என நாம் எவ்வாறு அறிகிறோம்?

8. புதிய ஏற்பாட்டின் முக்கியச் செய்தி என்ன?

9. எவ்வாறு எங்கே தேவன் பாவம் நிறைந்த மனிதவர்க்கத்தைத் தம்மோடு ஒப்புரவாக்கினார்?


10. நம்முடைய வாழ்வில் இயேசுவைப் பிரசங்கிக்கவும் போதிக்கவும் சக்தி வாய்ந்த வழிகள் எவையெவை?

**வகுப்புப் பயிற்சி:** ஒரு வகுப்பாக, வேத வகுப்பிற்கான ஒரு ஐக்கியக் கூட்டத்தை நடத்த ஒரு விசேஷித்த மாலை நேரத்தைத் திட்டமிட்டு, உங்கள் வாழ்க்கையில் இந்த வயதில் சவாலாக எடுத்துக் கொள்வதற்காக பாடத்தோடு தொடர்புள்ள ஒரு குறிப்பிட்ட பகுதியினைக் குறித்து விவாதிக்கவும். ஒவ்வொருநாளும் யாரேனும் ஒருவர் வந்து கலந்து கொள்ளும்படி அழையுங்கள்.


Numbers in our Human Body

| | | |
|---|---|---|
| No of Major Arteries | - | 20 |
| No of Bones | - | 206 |
| No of Glands | - | 15 |
| No of Hormones | - | 50 |
| No of Hair Follicles | - | 1,50,000 |
| No of Holes Male | - | 8 |
| Female | - | 9 |
| No of Joints | - | 360 |
| No of Lymph Nodes | - | 500 to 600 |
| No of Muscles | - | 640 to 850 |
| No of Nerves | - | 95 to 100 Billion |
| No of Systems | - | 11 |
| No of Teeth | - | 32 |
| No of Tissues | - | 4 types |
| No of Veins | - | 100,000 miles long |
| No of Vital Organs | - | 5 |

Can We Know?


மருத்துவம் சம்பந்தமாக
அநேக காரியங்களை தெரிந்துகொள்ள
தொடர்பு கொள்ள மொபைல் எண்: 9750893398